Reg. No. 1-M.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

JULY 15, 1930.

நெ. 28.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1930-ம்௵ ஜூலை௴ 15௳. [PRICE, 6 *pies*.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

டெவெலப்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1930-ம்௵ மே௴ 28௳
(1115-ம் ந. கவர்ன்மெண்ட் உத்தரவு).

நெ. 234.—(1923-ம்௵த்து 4-வது ஆக்டாகிய) 1923-ம்௵த்திய இந்துதேசத்துச் சுரங்க ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (g) குறிப்பிட்ட பகுதியை (1897-ம்௵த்து 10-வது ஆக்டாகிய) 1897-ம்௵த்து ஜெனரல் க்ளாஸெஸ் ஆக்ட் 21-வது பிரிவுடன் சேர்த்து வாசித்து அந்தப் பகுதியின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-1924-ம்௵ நவம்பர்௴ 26௳ டெவெலப்மெண்ட் டிபார்ட்மெண்டில் பிறந்த பிரதேச கவர்ன்மெண்டாரின் 6-ம் நெ. விளம்பரத்துடன் 1925-ம்௵ ஜனவரி௴ 6௳யுள்ள போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட் 1-ம் பாகத்தின் 35-வது, 36-வது பக்கங்களிலே (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டு, பிற்பட்டு திருத்தப்பட்டபடிக்குள்ள விதிகளில் அடியிற்கண்ட திருத்தங்களை இதனால் களிகூர்ந்து செய்கிறார்கள். இந்தத் திருத்தங்கள் 1923-ம்௵த்திய இந்துதேசத்துச் சுரங்க ஆக்ட் 31-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஏற்கனவே பிரசித்தம் செய்யப்பட்டிருக்கின்றன.

திருத்தங்கள்.

1. ஷை விதிகளைச் சேர்ந்த 9-வது விதிக்குப் பிறகு அடியிற்கண்ட விதியை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

"9-A. ஷை ஆக்ட் 23-B பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அவசியமாயிருக்கும் நோடிஸானது B ஷெட்யூலில் கண்டிருக்கும் நமூனாப்படி இருக்கவேண்டும்; மேலும், அதை இங்கிலிஷ் பாஷையிலும் ஜில்லாவில் வழங்கும் கோர்ட் பாஷையிலுமாக சுரங்க ஆபிஸுக்கு வெளியே ஒட்டவேண்டும்."

2. ஷை விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் A ஷெட்யூலுக்குப் பிறகு அடியிற்கண்ட ஷெட்யூலை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

B ஷெட்யூல்.

(9-A விதியைப் பார்க்கவும்.)

வேலையை ஆரம்பிப்பதற்கும் முடிப்பதற்கும் சம்பந்தப்பட்ட நோடிஸ்.

சுரங்கத்தின் பெயர்.

சுரங்கச் சொந்தக்காரரின் பெயர்.

இந்த சுரங்கத்தில் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும் நபர்கள் கீழே குறிப்பிட்டிருக்கும் மணிநேரங்களுக்கு இடையில் தங்களுடைய வேலையை ஆரம்பித்து முடிக்க வேண்டுமென்று இதனால் அறிக்கையிடப்படுகிறது:—

இன்ன விதமான வேலைக்காரரென்பது—

முதல் முறை வேலை.		இரண்டாம் முறை வேலை* ஏதாவதிருந்தால், அது.		மூன்றாம் முறை வேலை* ஏதாவதிருந்தால், அது.	
ஆரம்பமாவது.	முடிவது.	ஆரம்பமாவது.	முடிவது.	ஆரம்பமாவது.	முடிவது.
முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.
முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.
முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.	முற்பகல்* / பிற்பகல்.

* வேண்டியிராத வார்த்தைகளை அடித்துவிடவேண்டும்.

குறிப்பு.—பூமிக்குக் கீழே வேலை செய்வதற்கு அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் நபர்களின் வேலையை, அவர்கள் சுரங்கத்தின் மேற்புறத்தை விட்டுப்போகும் நேரத்திலிருந்து முறை வேலை முடிந்த பிறகு அந்த இடத்துக்கு அவர்கள் முடிவாய்த் திரும்பிவருகிற நேரம் வரையில் கணக்கிடவேண்டும்.

எஸ். வி. ராமமூர்த்தி,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.